**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 02 -ஆம் நாள்.

**I.A.No.596/2024**

**in**

**O.S.No.150/2018**

பரமேஸ்வரி .... மனுதாரர் / வாதி

// எதிர்//

1. ராஜகோபால்
2. ஊமைத்துரை
3. கண்ணன் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc, B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து கொடுத்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில்

மனுதாரரை P.W.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு மேற்கொண்டு சாட்சி விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சி வழக்கு சொத்துக்கள் மனுதாரர் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதை நிரூபிக்கக்கூடிய மிகவும் முக்கியமான சாட்சி ஆவார். அவரை சாட்சிகளாக விசாரித்து மனுதாரர் தரப்பை நிரூபிக்க வேண்டியுள்ளது. மனுதாரரிடம் அனுமதி பெற்று சாட்சி பட்டியல் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. ஆகவே மனுதாரர் கொடுத்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக் கொள்ளும்படி உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும்.

ஆகவே மனுதாரர் கொடுத்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :- (அதனை மற்ற எதிர்மனுதாரர்கள் தனதாகவும் ஏற்றுக் கொள்கின்றனர்)**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டியுள்ளது. அதனை இந்த எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கிறார்கள்.

மேற்படி அசல் வழக்கானது மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்திற்காக பல வாய்தாக்கள்

போடப்பட்டு சாட்சி பட்டியல் தாக்கல் செய்யாமல் அலட்சிய போக்குடன் இருந்துவிட்டு தற்போது காலம் தாழ்த்தி சாட்சி பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவானது எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தையும் வீண் மன உளைச்சலையும் கொடுக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகள் மனுதாரர்களின் நெருங்கிய உறவினர் என்ற வகையில் மனுதாரர்களுக்கு ஆதரவாக எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வைத்து மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் மனுதாரரால் தாக்கல் செய்திருக்கும் மனுவானது சட்டப்படி ஏற்புடையதல்ல என்ற வகையில் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மேற்படி அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்திற்கு துளியளவும் சம்மந்தமில்லாத நபர்களை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி தவறானது. ஆகவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து எழுவினாக்கள் வனையப்பட்டு அசல் வழக்கில் வாதி தரப்பு விசாரணை முடிவடைந்து, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவின் சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்களை விசாரிப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவை அனுமதிக்கக் கோரி, மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்துள்ள போதிலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள சாட்சி பட்டியலில் கண்டுள்ள சாட்சிகள் மனுதாரர் தரப்பிற்கு மிகவும் முக்கியமான சாட்சிகள் என்று கூறியுள்ளதாலும் மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் உள்ளது என்பதை கருத்திற் கொண்டும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (17.12.2024) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 02 -ஆம் நாள்.

**I.A.No.596/2024**

**in**

**O.S.No.150/2018**

திருமதி.பரமேஸ்வரி, வயது 48, க/பெ.புலவேந்திரன், இந்து, வசிப்பிடம் நெ.5/287, மேலத்தெரு, பரவாக்கோட்டை மற்றும் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

..... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. திரு.ராஜகோபால், வயது 74, த/பெ.அப்பாவு, இந்து, வசிப்பிடம் மேலத்தெரு, பரவாக்கோட்டை மற்றும் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
2. திரு.ஊமைத்துரை, வயது 64, த/பெ.கோவிந்தராஜ், இந்து, வசிப்பிடம் மேலத்தெரு, பரவாக்கோட்டை மற்றும் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.
3. திரு.கண்ணன், வயது 44, த/பெ.ஜெகநாத தேவர், இந்து, வசிப்பிடம் மேலத்தெரு, பரவாக்கோட்டை மற்றும் அஞ்சல், மன்னார்குடி முன்சிபி மற்றும் தாலுக்கா.

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து கொடுத்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 02.12.2024

மனு கோப்பிற்கு எடுத்த நாள் : 04.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc, B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.